# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
# Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
# District Munsif, Arni.
# O.S.22/2010

2025—ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.3 பாண்டிமாதேவி வயது 39 க/பெ பிரபு**

**நேரம் - 12.20**

**குறுக்கு விசாரணை**

முனுசாமி கவுண்டர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் தாத்தா தர்மராஜாவின் தந்தை ஆவார். இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள கோட்டீஸ்வரன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் சின்ன தாத்தா ஆவார். நான் முனுசாமி கவுண்டர் அல்லது கோட்டீஸ்வரன் ஆகியோரில் யாருடைய கூட்டுக்குடும்ப உறுப்பினராக இருக்கிறேன் என்றால் கோட்டீஸ்வரன் என்பவர் கூட்டுக் குடும்ப உறுப்பினராக உள்ளேன். அவ்வாறு என்றால் நான் முனுசாமி கவுண்டர் மற்றும் என் தாத்தா தர்மராஜா ஆகியோரின் குடும்பத்தில் கூட்டுக் குடும்ப உறுப்பினராக இல்லை என்றால் இருக்கிறேன். எல்லோரும் ஒரே கூட்டு குடும்பமாகதான் இருந்து வருகிறோம்.

2. நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில் வசித்து வருகிறோமா என்றால் இல்லை. தனித் தனி குடும்பமாகதான் வசித்து வருகிறோம். இவ்வழக்கின் 1ம் வாதி கோட்டீஸ்வரன் இறந்த பிறகு அவரின் வாரிசுகளான 2 முதல் 5 வரையான வாதிகளைதான் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றாலும், கூட்டுக் குடும்ப தலைவர் யாரும் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் மேற்படி 1ம் வாதிதான் கூட்டுக் குடும்ப பொறுப்புகளை பார்த்துக் கொண்டார்.

3. இவ்வழக்கின் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் ஏற்கனவே அசல் வழக்கு எண்.1/2011 என்ற வழக்கில் கோட்டீஸ்வரன் மற்றும் குடும்ப உறுப்பினர்களை சேர்த்து வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றாலும், அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் நான் 3ம் பிரதிவாதியாக இருந்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் எனக்கு என் வழக்கை நடத்த ஏதாவது வழக்கறிஞரை நியாமித்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கில் கோட்டீஸ்வரன் வாரிசுதாரர்கள்தான் வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.

4. மேற்படி வழக்கில் கோட்டீஸ்வரன் பதிலுரை பத்தி 15ல் கோட்டீஸ்வரன் மட்டும்தான் அசல் வழக்கு எண். 22/2010 என்ற வழக்கை தாக்கல் செய்தார், 5ம் பிரதிவாதியாகிய தியாகராஜன் என்பவருடன் தாக்கல் செய்யவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேப்போல் என் தாத்தாவின் தந்தை முனுசாமி கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணம் முனுசாமி கவுண்டர் கூட்டுக் குடும்ப வருமானத்தை வைத்துதான் மேற்படி சொத்தை கிரையம் பெற்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு அதுப்போல் எதுவும் குறிப்பிடவில்லை என்று கூறினார்.

5. என்னிடம் காண்பிக்கப்படும் இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள வா.சா.ஆ.14 ஆவணம் முனுசாமி கவுண்டர் இவ்வழக்கின் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த ஆவணம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார். மேற்படி கிரையத்தை முனுசாமி கவுண்டர், தியாகராஜன், கோட்டீஸ்வரன், பார்த்தீபன் ஆகியோர் சேர்ந்துதான் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார். அதேப்போல் என்னுடைய மற்றொரு தாத்தா லட்சுமணன் என்பவர்தான் பல்நோக்கு கூட்டுறவு நாணய சங்கத்தின் தற்காலிக தலைவர் என்ற முறையில் கிரையம் பெற்றார் என்றால் சரிதான் என்று சாட்சி கூறினார்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**நேரம் 12.50**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,Arni